**பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி வினைத்திறன் முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் கட்டம் II - 2022**

---

பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் எரிசக்தி வினைத்திறன் முன்னேற்ற முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் கட்டம் II இன் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் (ADB) இலங்கை சனநாயக சோசலீச குடியரசிற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2016 திசெம்பர் 27 ஆம் திகதிய 3483 எஸ்ஆர்ஜ மற்றும் 3484 எஸ்ஆர்ஜ ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் IV ஆம் உறுப்புரையின் 4.04 ஆம் பிரிவு மற்றும் இலங்கை சனநாயக சோசலீச குடியரசிற்கும் ஏஜென்ஸ் பிரன்சியஸ் டி அபிவிருத்திக்கும் இடையில் கைச்சாட்ட 2018 ஒக்தோபர் 17 ஆந் திகதிய சீஎல்கே 1022 01 கே ஆம் இலக்க கடன் வசதி உடன்படிக்கையின் 03 ஆம்உறுப்புரையின் 3.4.4 ஆம் பிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வெண்டுமென நான் கருதும் என்னுடைய கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், குறிக்கோள்கள், நிதியளித்தல் மற்றும் காலப்பகுதி**

நிகழ்ச்சித்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், மின்சக்தி அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளடுதடன் இலங்கை மின்சார சபை நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. நிகழச்சித்திட்டத்தின் ஆரம்ப நடவடிக்கைகள் பரிமாற்ற வினைத்திறனான உட்கட்டமைப்பு தரமுயர்த்தல், நடுத்தர வேல்டேச் வலையமைப்பின் வினைத்திறனான முன்னேற்றம் மற்றும் மின்சக்தி நோக்கத்திற்காக கேள்வி வழி முகாமைத்துவ முன்னேற்றம் போன்ற பிரதான 03 கூறுகளின் கீழ் அமுலாக்கப்பட வேண்டுமென்பதே செயற்திட்ட நடவடிக்கைகளாக உள்ளன. கடன் உடன்படிக்கைப் பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 39,808.25 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 260 மில்லியன் தொகையானதுடன் அதில் ரூபா 27,985.45 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 180 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஏஜென்ஸ் பிரன்சியஸ் டி அபிவிருத்தியால் நிதியளிக்கப்பட வேண்டுமென உடன்பாடு காணப்பட்டது. மிகுதி ரூபா 11,822.80 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 80 மில்லியன் தொகை இலங்கை மின்சார சபையால் நிதியளிக்கப்பட வேண்டுமென எதிர்பாரர்க்கப்பட்டது. நிகழ்ச்சித்திட்டம் அதன் செயற்பாடுகளினை 2017 யூலை 10 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 திசெம்பர் 31 அளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது. எவ்வாறாயினும், நிகழ்ச்சிதிட்ட நடவடிக்கைகளின் பூர்த்தியாக்கல் திகதி 2024 சனவரி 10 வரை நீடிக்கப்பட்டிருந்தது.

**1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

என்னனுடைய அறிக்கையின் அட்டவணை 2 இல் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களை தவிர, 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி நிலமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் அட்டவணை 2 இல் விபரிக்கப்பட்ட விடயங்கள் மீது என்னுடைய அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்பட்டுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்புகளும் ஆளுகையுடன் அவற்றினை சாட்டுதல் செய்தலும்**

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிகழ்ச்சித்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வற்காக கணக்காய்வாளருடைய பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிகழ்ச்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்கீட்டுக் குறைபாடுகள் | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளின் பரிந்துரைகள் |
|---|---|---|
| 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் ஏஜென்ஸ் பிரன்சியஸ் டி அபிவிருத்தி முகவரின் கடன் மீதி இலங்கை கணக்கீட்டு நியமம் 21 இற்கமைய அறிக்கையிடல் திகதியில் இ.ரூபா பெறுமதிக்கு மாற்றப் பட்டிருக்கவில்லை இதன்விளைவால் நிதி நிலைமை கூற்றில் காட்டப்பட்ட கடன் மீதி மற்றும் அபிவிருத்தி செலவினம் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.. | கிளைக் கணக்குகளின் தொகுதியாக மேலதிக பொது முகாமையாளரின் (செயற்திட்டங்கள்) கீழ் செயற்திட்ட கணக்குகளை வடிவமைப்பது இலங்கை மின்சார சபையின் நடைமுறையாக உள்ளது. இது வழமைபோல் கணக்காய்வாளர் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி மூலம் முறைப்படி ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்ததுடன் எவ்வித வினாவும் எழுந்திருக்கவில்லை. மேலதிக பொது முகாமையாளரின் (செயற்திட்டங்கள்) கீழ் சகல செயற்திட்டங்களும் நிறைவேற்றப்பட்டிருந்தது அதேநேரம் கடன் கைதவிர்ப்பை மற்றும் இலங்கை மின்சாரசபை கொள்கை மற்றும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட தத்துவங்கள் என்பவற்றின் வழியில் சம்பந்தப்பட்ட சொத்து நிர்மாணம் பதியப்படுகின்றன. சகல கொடுக்கல் வாங்கல்களும் கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் வரலாற்று கிரய எண்ணக்கருவின் கீழ் பொதுப் பேரேட்டில் பதியப்பட்டன. சம்பந்தப்பட்ட கடன்கள் விதிக்கப்பட்டவாறு நிதி அமைச்சின் வழிகாட்டலின் வழியில் இலங்கை மின்சார சபை நிதி முகாமையாளரால் பேணப்பட்டு நிர்வகிக்கப்பட்டு மற்றும் தீர்ப்பனவு செய்யப்படுகின்றன. எனவே, கடன்கள் இலங்கை மின்சார சபை தலைமை அலுவலகத்தின் பொதுப் பேரேட்டின் கீழ் பதியப்படுகின்றன. | இலங்கை கணக்கீட்டு நியமத்திற்கமைய நிதிக்கூற்றுகள் தயாரிக்கப்பட வேண்டும். |

3. பௌதீக செயலாற்றல்

3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் நிதி மற்றும் பௌதீக முன்னேற்றம்

கடன் உடன்படிக்கை பிரகாரம், நிகழ்ச்சித்திட்டத்தின் ஆரம்ப நடவடிக்கைகள் பரிமாற்ற உட்கட்டமைப்பு தரமுயர்த்தல், நடுத்தர வேல்டேச் வலையமைப்பின் வினைத்திறனான முன்னேற்றம் மற்றும் வினைத்திறனான மின்சக்தி நோக்கத்திற்காக கேள்வி வழி முகாமைத்துவ முன்னேற்றம் போன்ற பிரதான 03 கூறுகளின் கீழ் அமுலாக்கப்பட வேண்டுமென பட்டியலிடப்பட்டதுடன் ஆறு பொதிகளின் கீழ் ஒப்பந்தங்களை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டது.

| இல | கூறு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | லொட் பீ2 பாதுக்க – ஹொரண 132kV, 25 கிமீ பரிமாற்ற வழியின் பொதி 2 மற்றும் ஹொரண வாழைச்சேனை 132kV பரிமாற்ற வழியின் 2 ஆவது சுற்று வலுப்படுத்தல் என்பவற்றின் நிர்மாணம் 2020 ஏப்ரல் 30 இல் தொடங்கப்பட்டு 2023 யூன் 14 இல் பூர்த்தியாக்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டது. பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், அவற்றின் மீது பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் முறையே குறைந்த 41.3 சதவீதம் மற்றும் 42.5 சதவீதத்தை காட்டியிருந்தது. | ஒப்பந்தகாரர் நிர்மாணத்தை கவனிப்பதற்கு அவருடைய இயலாமை பற்றி பல தடவைகள் அறிவித்திருந்ததுடன் நாட்டின் பொருளாதார நிலையால் செலுத்த வேண்டியவற்றின் விலை அதிகரித்தமையால் வேலைகள் தடைபட்டன. இது CEB பணிப்பாளர் சபை மற்றும் ADB இற்கு அறிவித்திருந்தது. CEB பணிப்பாளர் சபை மிகுதி பொருள் கொள்வனவை கண்காணிப்பதற்கு அறிவித்திருந்ததுடன் குறைந்த நோக்க சிவில் நிர்மாணம் மற்றும் பொருள் கொள்வனவு திருப்திகரமாக இருப்பின் ஒப்பந்தம் முழுவதும் செய்யப்பட வேண்டும். நிர்மாண வேலைகள் CEB ஆல் செய்யப்பட வேண்டும் AFD மற்றும் நிதியளிக்கும் முகவர் அதற்காக ஒத்துழைப்பை வழங்கியிருந்தனர். | நிர்மாண வேலைகளை நிறை வேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் ஒப்பந்தகாரர் வேலைகளை நெருக்கமாக கண்காணிக்க வேண்டும். |
| (ஆ) | ஆரம்ப உப நிலையங்களின் பொதி 5 நிர்மாண வேலைகள் 2020 செப்தெம்பர் 21 இல் தொடங்கப்பட்டிருந்ததுடன் 2023 மே 31 அளவில் பூர்த்தியாக்க வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், அவற்றின் மீது 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் முறையே குறைந்த 55 சதவீதம் மற்றும் 73 சதவீதத்தை காட்டியிருந்தது. | 2023 மே 31 இல் உள்ளவாறு ஒட்டுமொத்த பௌதீக முன்னேற்றம் 63% ஆக இருந்ததுடன் நிதி முன்னேற்றம் 73% ஆக இருந்தது. எதிர்ர்த்த முன்னேற்றத்தை அடையப் பட்டிருக்காமைக்கான பிரதான காரணம் ஒப்பந்தகாரருக்கு ரத்தனம்பிட்டடிய பிரதேசசபை காணி கையளிக்கப்பட்டிருக்காமை காரணமாகவிருந்தது. ரத்தனம்பிட்டிய காணி தொடர்பில் 3 ஆண்டுகளிற்கு மேலாக காணி உரிமையாளர் சம்மத விடயம் உடன்படாதிருந்ததுடன் தற்போது முழுமையாக தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது. ரத்தனம்பிட்டிய பிரதேச சபை உள்ளடங்கலாக சகல மூன்று பிரதேச சபை வேலைத்தள்களும் மிகுதி வேலைகளை பூர்த்தியாக்குவதற்கு ஒப்பந்தகாரருக்கு நியாயமான கால நீடிப்பு (2023 நவம்பர் 15 வரை) வழங்கப்பட்டிருந்தது. | நிர்மாண வேலைகளை நிறை வேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் ஒப்பந்தகாரர் வேலைகளை நெருக்கமாக கண்காணிக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | பொதி 9 நிர்மாண வேலைகள்: கரவெலப்பிட்டியவில் 220kV உப நிலைய சுவீச்பலகை 2020 செப்தெம்பர் 14 இல் தொடங்கப்பட்டிருந்ததுடன் 2023 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்தியாக்க வேண்டுமென பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம், அவற்றின் மீது 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பௌதீக மற்றும் நிதி முன்னேற்றம் முறையே குறைந்த 45 சதவீதம் மற்றும் 25.3 சதவீதத்தை காட்டியிருந்தது. | பொதி 9 நிர்மாண வேலைகள்: கரவெலப்பிட்டியவில் 220kV உப நிலைய சுவீச்பலகையின் நிதி முன்னேற்றம் 69% ஆகவும் பௌதீக முன்னேற்றம் 65% ஆகவும் உள்ளது. செயற்திட்டமானது 2023 செப்தெம்பர் 30 அளவில் பூர்த்தியாக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்பட்டது. | நிர்மாண வேலைகளை நிறை வேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன் ஒப்பந்தகாரர் வேலைகளை நெருக்கமாக கண்காணிக்க வேண்டும். |
| (ஈ) | செயற்திட்ட நிர்வாக கைநூலின் பிரகாரம், சுமாட் நிலையம் மற்றும் முன்னோடி மீட்டரிடல் உப நிலையம் என்பவற்றிற்காக ஐ.அ.டொலர் 11.1 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்தது.<br>எவ்வாறாயினும், முன்னோடிச் செயற்திட்டமானது 2023 யூன் வரையும் அமுலாக்கப் பட்டிருக்கவிலலை. | கட்டுநாயக்க சுமாட் மீட்டரிடல் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ஐ.அ.டொலர் 2.0 மில்லியனிற்கு மாற்றப் பட்டிருந்தது. இது ADB இற்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன் ADB ஆலோசனை பெறப்பட்டிருந்தது. கேள்வி வழங்குவதற்காக DPC அனுமதி 2022 நவம்பர் 1 இல் பெறப்பட்டிருந்தது. கேள்வியாளர் கேள்வி மற்றும் கேள்வி பிணை முறியாக இந்த திகதிக்கு முன்னர் கேள்வி பிணை முறி கேள்வித் உத்தரவாத காலத்தை நீடிப்பதற்கு வேண்டியிருந்தது. பிணைமுறி காலாவதியாக இருந்தது.<br><br>நாட்டில் நிலவுகின்ற பொருளாதார நிலை காரணமாக கேள்வி விலைக்கு விலை முரணை கேள்வியாளர் வேண்டியிருந்ததுடன் கேள்வி மற்றும் கேளிவி பிணைமுறி உத்தரவாத காலம் நீடிக்காமல் கொடுப்பனவுகள் தொடர்பான பல தெளிவுபடுத்தல்கள் மற்றும் ஒப்பந்தம் நிறைவேற்றலை கோரியிருந்தது. | ஒப்பந்த நிர்வாக நடவடிக்கைகளை வினைத்திறனான செயற்படுத்த வேண்டும். |

### 3.2 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளின் பரிந்துரைகள் |
|---|---|---|
| செயற்திட்டத்திற்கு மாற்றப்பட்டிருந்த ஆதனம் பொறி மற்றும் உபகரணங்களை பதிவதற்கு நிலையான சொத்துப் பதிவேடொன்றைப் பேணுவதற்கு செயற்திட்டம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வின் போது உங்களுக்கு சமர்ப்பிக்கப் பட்டவாறு செயற்திட்டம் வாரியாக முழுச் செயற் திட்டங்களிற்கும் செயற்திட்ட பிரிவானது நிலையான சொத்துப் பதிவேட்டினை முறைப்படி பேணியிருந்தது. | செயற்திட்டம் தொடங்கியதில் இருந்து தொடர்ச்சியாக நிலையான சொத்துப் பதிவேண்டினை பேணப்பட வேண்டும். |